[2011 ஜனவரி 11

(ஆ) வேலூர் மாவட்டம், சின்ன அல்லாபுரம், விவேகானந்தா அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளி மூடப்பட்டது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன், என்ன சொல்லுங்கள்?

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய வேலூர் மாவட்டத்தில் அல்லாபுரம் பேரூராட்சிக்கு உட்பட்டிருக்கிற சின்ன அல்லாபுரத்தில் விவேகானந்தா நிதியுதவி தொடக்கப்பள்ளி திடீரென்று நிருவாகக் கோளாறு காரணமாக மூடப்பட்டுவிட்ட காரணத்தினாலே, 400 மாணவர்கள் இன்று படிப்பைத் தொடர முடியாமல் அல்லலுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். இப்போது ஓர் இடைக்காலத் தீர்வாக அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் அவர்கள் வாடகைக் கட்டடத்திலே கல்வி பயின்று கொண்டிருக்கிறார்கள். அரசின் நிதியுதவி பெறக்கூடிய 5 ஆசிரியர்கள் அங்கே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் அந்த இடத்தில்—அது அரசுக்குச் சொந்தமான ஓர் இடம்; அரசுக்குச் சொந்தமான கட்டடம் இருக்கிறது; அந்த இடத்திலே---பஞ்சாயத்து யூனியன் துவக்கப் பள்ளியைத் தொடங்கி அந்த மாணவர்கள் படிப்பதற்கு. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஞானசேகரன், இன்று அவை ஆரம்பித்த பிறகு கொண்டுவந்து இதுகுறித்த அறிவிப்பைக் கொடுத்திருக்கிறீர்கள். இனிமேல் இதை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுபோய் தேவையான விவரங்களையெல்லாம் சேகரித்துத்தான் பதில் சொல்ல முடியும். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, திரு. வேல்முருகன், நீங்கள் கொடுத்திருக்கிற matter-ஐ அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுபோய் பதில் கொடுக்கச் சொல்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அமைச்சர் பதில் சொல்வதற்குத் தயாரானவுடன் உங்களைப் பேச அனுமதிக்கிறேன். அமைச்சர் பதில் சொல்லத் தயாரானவுடன் நான் உங்களைக் கூப்பிடுகிறேன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் அரசுக்குச் சொந்தமான அந்த இடத்தில் உடனடியாகப் பஞ்சாயத்து யூனியன் பள்ளியைத் தொடங்குவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

2011 ஜனவரி 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் குறிப்பிடக்கூடிய அந்த விவேகானந்தா பள்ளி ஒரு அரசு நிதியுதவி பெறக்கூடிய பள்ளி. அந்தப் பள்ளியிலே சில பிரச்சினைகள் இருந்தன. உதாரணத்திற்கு, அந்தப் பள்ளி செயல்படக்கூடிய இடத்திலே நிரந்தர அங்கீகாரத்தோடு செயல்படக்கூடிய இடத்தை விட்டுவிட்டு வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அங்கே ஒரு விளையாட்டு மைதானம் கட்டக் கொடுத்த இடத்திலே அந்தப் பள்ளியைத் துவக்கியதற்கு உள்ளூர் மக்கள் எதிர்ப்புத் தெரிவித்து, அதன் காரணமாக சட்டம்-ஒழுங்குப் பிரச்சினைகள் எல்லாம் ஏற்பட்டு, வருவாய்த் துறை மற்றும் காவல் துறை அதிகாரிகளிடத்திலெல்லாம் அவர்கள் பேச்சுவார்த்தைகள் நடத்தினார்கள். இந்தச் சூழ்நிலையில் அந்தப் பள்ளி மூடப்பட்டது. இருந்தாலுங்கூட, அங்கே படிக்கக்கூடிய மாணவர்களுடைய கல்வி பாதிக்கப்படக்கூடாது என்ற காரணத்தினாலே அங்கே Education Guarantee Scheme (EGS) என்ற கல்விக் காப்புறுதித் திட்டத்தின்கீழ் உடனடியாக அங்கு ஒரு பள்ளி துவக்கப்பட்டிருக்கிறது. அது அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் அடிப்படையில். அங்கே பணியாற்றிக் கொண்டிருந்த ஒரு தலைமையாசிரியர் உள்ளிட்டிருக்கக்கூடிய 4 ஆசிரியர்களை வேறு பள்ளிகளுக்குப் பணி நிரவல் மூலமாக (deployment) அனுப்பியிருக்கிறார்கள். இடைக்கால ஏற்பாடாக அங்கே EGS மூலமாக அந்தப் பள்ளி செயல்படுகிறது. இருந்தாலும், வரக்கூடிய கல்வியாண்டில் அந்தப் பள்ளி ஒரு முழுமையான தொடக்கப் பள்ளியாகச் செயல்படுவதற்கு அரசுக்கு முன்மொழிவுகள் வந்திருக்கின்றன. எனவே, அவர் எழுப்பியிருக்கக்கூடிய இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஓர் உறுதியை அளிக்கிறேன். வரக்கூடிய ஆண்டில் முழுமையான ஒரு பள்ளியாக அந்தப் பள்ளி அங்கே செயல்படும். அந்தப் பள்ளிக்குரிய ஆசிரியர் பெருமக்கள் மற்ற இடங்களிலிருந்து அங்கே பணியமர்த்தப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.